தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

RNI-TNTAM/2023/88253




| Vol: 02 | Issue: 86 | 4 Pages | 25.10.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 86 | 4 பக்கங்கள் | 25.10.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

**விளக்கம்:**

**(புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.**

## காசாவில் பள்ளிக்கூடம் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் 16 பேர் பலி



காசா, அக். 25

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாததாக்குதல்நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதற்கு பதிலடியாக காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் அரசு போர் தொடுத்தது. ஓராண்டை கடந்து நடந்து வரும் மோதலில் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் உயிரிழந்து உள்ளனர். மேலும் லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். ஹமாஸ் அமைப்பை முழுமையாக அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது எனஇஸ்ரேல்பிரதமர்பெஞ்சமின்நெதன்யாகுதிட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், காசாமுனையின் மத்திய பகுதியில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தின் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. அந்த பள்ளியில் போரால் வீடுகளை இழந்த மக்கள் முகாமிட்டு தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில், இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் 16பேர்உயிரிழந்ததாகபாலஸ்தீனமருத்துவஅதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

அதேபோல், நுசய்ரத் என்ற பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பாதுகாப்பு முகாம் மீதும் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்ததாக்குதலில்32பேர்படுகாயமடைந்ததாகதகவல்வெளியாகியுள்ளது. இந்த தாக்குதல்கள் குறித்து இஸ்ரேல் தரப்பில் இதுவரை அதிகாரப்பூர்வ விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பினர் 20 பேர் பலி



பெய்ரூட், அக். 25

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் தடை செய்யப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பு, ஈரான் ஆதரவுடன் லெபனானில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. காசாவில் இஸ்ரேல் ஹமாஸ் இடையே நடந்து வரும் போரில், ஹமாஸ் அமைப்புக்கு ஹிஸ்புல்லா ஆதரவு தெரிவித்துள்ளது. அதோடு இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் தொடர்ந்து ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து இஸ்ரேல் தரைவழி, வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில், ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கடந்த மாதம் 27ம் தேதி கொல்லப்பட்டார்.

இந்நிலையில், லெபனானில் கடந்த 24 மணி நேரத்தில் 20 ஹிஸ்புல்லா அமைப்பினரை அழித்ததாகவும், ஹிஸ்புல்லாவின் 160 க்கும் மேற்பட்ட நிலைகளை தாக்கியதாகவும் தெரிவித்து உள்ளது. லெபனானில் பல்வேறு இடங்களில்உள்ளஏவுகணைகள்மற்றும்ஆயுததளங்களைதகர்த்துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

மேலும் ஹிஸ்புல்லா அமைப்பினரின் ஆயுத கிடங்கை கண்டுபிடித்ததாகவும், அங்கு ராக்கெட் லாஞ்சர்கள், பீரங்கி தகர்ப்பு ஆயுதங்கள், மற்றும் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

## பிலிப்பைன்சில் புயல், வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 23 பேர் பலி



மணிலா, அக். 25

வடகிழக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் இசபெலா மாகாணத்தில் இன்று அதிகாலை டிராமி என்ற புயல் தாக்கியது. இந்த புயலால் ஏற்பட்ட பரவலான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தில் பல வீடுகள், கார்கள் நீரில் மூழ்கின. வீடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்க மோட்டார் படகுகளில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். நகரங்கள்மற்றும்கிராமங்களில்உள்ளசாலைகளில்மரங்கள் முறிந்து விழுந்ததால் அங்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

பெரும்பாலான இறப்புகள் மணிலாவின் தென்கிழக்கில் உள்ள 6 மாகாணங்களில் பதிவாகியுள்ளன. இதில் நாகா நகரில் மட்டும் 7 குடியிருப்பாளர்கள் உள்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் சில பகுதியில் புயலுடன் கூடிய வானிலை இன்னும் நீடித்து வருவதால், நிவாரண பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புயலால் 20 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் பேரிடர் தணிப்பு நிறுவனம் கூறியது, இதில் 75,400 கிராம மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பானஇடத்தில்தஞ்சமடைந்துள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடுத்த மாதம் கோவை வருகை



கோவை, அக். 25

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று நாமக்கல் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் அவர் பேசுகையில் அடுத்த மாதம் முதல் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வரும் அரசு திட்டப்பணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு கள ஆய்வு செய்யப்போவதாக அறிவித்தார்.

அதன்படி முதல் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நவம்பர் மாதம் கோவை வருகிறார். காந்திபுரத்தில் 6.9 ஏக்கர் பரப்பளவில் ரூ.300 கோடியில் கருணாநிதி நூற்றாண்டு நூலகம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த நூலகத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டுகிறார்.

முன்னதாகவிளாங்குறிச்சி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2வது ஐ.டி. பார்க் வளாகத்தை திறந்து வைக்கிறார். பீளமேடு பகுதியில் ஏற்கனவே ஐ.டி. பார்க் செயல்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்காக பொதுப்பணித் துறைமூலம்கோவைவிளாங்குறிச்சி தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் ரூ.114.16 கோடி மதிப்பில் இந்த புதிய ஐ.டி. பார்க் கட்டப்பட்டது. இதை முதலமைச்சர்திறந்துவைத்து ஐ.டி. பொறியாளர்களுக்குஅர்ப்பணிக்கிறார். இந்த விழாக்கள் நவம்பர் 4ந் தேதி நடைபெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக உயர்அதிகாரிகளிடம் கேட்டபோது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடுத்த மாதம் கோவை வருவது உறுதியாகிஉள்ளது. ஆனால் விழா 4ந் தேதி நடைபெறுமா, தள்ளிப் போகுமா என்பது தெரியவில்லை. காரணம் 4ந் தேதி என்பது தீபாவளி விடுமுறைக்கு பிறகு வரும் முதல் வேலைநாளாக ஆகும். இதனால்முதலமைச்சர் வருகை தேதி முறைப்படி அறிவிக்கப்பட்டதும் தெரிவிக்கிறோம் என்றனர்.

## ரோட்டரி கிளப் ஆப் திருக்கோவிலூர் டெம்பிள் சிட்டி போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருக்கோவிலூர், அக். 25

உலக போலியோ தினத்தை முன்னிட்டு ரோட்டரி கிளப் திருக்கோவிலூர் டெம்பிள் சிட்டி சார்பில் போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் நிதி திரட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

உலகமெங்கும் போலியோவை ஒழிப்பதில் ரோட்டரி சங்கம் தான் போலியோ சொட்டு மருந்தை உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் அரசாங்கத்துடன் இணைந்து உலகத்தில் உள்ள அனைத்து ரோட்டரி நண்பர்கள் ஒன்று சேர்ந்து போலியோ சொட்டு மருந்தை உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் அரசாங்கத்துடன் இணைந்து உலகத்தில் உள்ள அனைத்து ரோட்டரி நண்பர்களும் ஒன்று சேர்ந்து போலியோ சொட்டு மருந்தை அன்றிலிருந்து இன்று வரை கொடுத்துக்கொண்டு இருப்பதாக கூறுகின்றனர். பேரணையின்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் திருக்கோவிலூர் போக்குவரத்து காவல்துறையினர் சிறப்பாக பணியாற்றினார் இந்த நிகழ்ச்சியில் காவல் துணை கண்காணிப்பாளர் பார்த்திபன் ரோட்டரி சங்கம் நிர்வாகிகள் ராமலிங்கம், தேவசேனாதிபதி, செந்தில்குமார், கோத்தம்சந்த், சௌந்தர்ராஜன் முன்னாள் ராணுவத்தினர் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## தஞ்சையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர்,அக்.25

தஞ்சை ரெயில் நிலையத்திலிருந்து தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பொது அறுவை சிகிச்சைத் துறை சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சித்தலைவர் பிரியங்கா பங்கஜம் கொடியசைத்து தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: உலகம் முழுவதும் மார்பக புற்றுநோய்கள் அதிகளவில் பரவி வருகிறது. வருமுன் காப்பதே இதற்கான தீர்வாகும். மார்பக புற்றுநோயின் அறிகுறிகள் மற்றும் காரணத்தை தொடக்க நிலையிலே கண்டறிந்தால் இதனை கட்டுபடுத்த முடியும். கடந்த பத்து ஆண்டுகளாக இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் முகாம்கள் உலகம் முழுவதும் அக்டோபர் மாதத்தை பிங்க் அக்டோபர் மாதமாக அனுசரித்து வருகிறோம். தஞ்சை மருத்துவக் கல்லூரியிலும் கடைபிடிக்கபட்டு வருகிறது. அக்டோபர் 1 முதல் 31 ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளை இது தொடர்பாக நடத்திவருகிறோம். அதனடிப்படையில் பொது அறுவை சிகிச்சை துறை சார்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி தஞ்சாவூர் இரயில் நிலையத்திலிருந்து இராசாமிராசுதார் மருத்துவமனை வரை சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தினர்.

இதன் பகுதியாக தற்போது ஒரு நடைபயணம் மேற்கொண்டுள்ளோம் அது மட்டுமில்லாது இதற்காக வருடம் முழுவதும் புறநோயாளிகள் பிரிவில் மார்பக புற்றுநோயாளிகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து அவர்களை உள்நோயாளியாக அனுமதித்து அறுவை சிகிச்சைகள் உட்பட பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறோம். எனவே இந்த விழிப்புணர்வு இயக்கத்தில் நாம் அனைவரும் இணைந்து மார்பக புற்றுநோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி அதிகப்படியான பெண்களை இந்நோயிலிருந்து காத்து அவர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் பாலாஜிநாதன், அறுவை சிகிச்சை துறை தலைவர் டாக்டர் ஜெகதீசன்

டாக்டர்.ஜீவாராமன். டாக்டர்.சுமதி ரவிக்குமார், டாக்டர் முத்து விநாயகம், டாக்டர் ராமச்சந்திரன், டாக்டர் கார்த்திக்கேயன் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் மாரிமுத்து செவிலியர் பயிற்சி கல்லூரி முதல்வர் ஆரோன் ராஜா மிராசுதார் மருத்துவ மனை நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் அமுதவடிவு பிரகதீஸ் லயன்ஸ் சங்க செயலாளர் அறிவழகன் மற்றும் தஞ்சை மருத்துவக் கல்லூரி செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.







விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறை தேசிய உணவு ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் சிறு தானிய விழிப்புணர்வு விளம்பர ஊர்த்தி பிரசாரம் செஞ்சி வட்டார வேளாண்மை அலுவலகத்தில் செஞ்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மஸ்தான் கொடி அசைத்து தொடங்கி வைத்தார் உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலி மஸ்தான்.துரை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்




தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம் தாராபுரம் கோட்டத்தில் மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தலைமை. கனராஜ்வட்டக்கிளைதுணைதலைவர்விளக்கவுரை.ஆறுமுகம்வட்டக்கிளைபொருளாளர் சிறப்புரை மேகலிங்கம் மாவட்ட இனைச் செயலாளர் முன்னிலை.தில்லையப்பன் செயலாளர் சிவராஜ் இனைச செயலாளர் நன்றியுரை.சுமதி இணைச்செயலாளர் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தோல்வியை கண்டு துவளாமல் வெற்றியை நோக்கி ஓடினால் சாதனையாளராக மாறலாம்கவர்னர் ஆர்.என்.ரவி அறிவுரை

கொடைக்கானல், அக். 25

கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் இன்று 31வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் கவர்னர் ஆர். என்.ரவிதலைமைதாங்கி 397 பேருக்கு நேரடியாகவும், 6238 பேருக்கு பல்கலைக்கழகம் மூலமாகவும், 16 பேருக்கு பதக்கம் என மொத்தம் 6635 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.



விழாவில் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக துணைவேந்தர் சாந்திஸ்ரீ துளிப்புடி பண்டிட் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பல்வேறு அறிவுரைகள் வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் அன்னை தெரசா பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவிசெழியன் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஏற்கனவே கடந்த 2 பட்டமளிப்பு விழாவிலும் அவர் பங்கேற்கவில்லை. தொடர்ச்சியாக இன்று கொடைக்கானலில் நடந்த பட்டமளிப்பு விழாவிலும் அமைச்சர் கோவிசெழியன் பங்கேற்காமல் புறக்கணித்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிடம் என்ற சொல் புறக்கணிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் அதன் காரணமாகவே உயர்கல்வித்துறை அமைச்சர் பங்கேற்கவில்லை என தி.மு.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

முன்னதாக கொடைக்கானல் வந்த தமிழக கவர்னர் ஆர்.என். ரவி இன்று காலை இங்குள்ள சங்கர வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு வருகை தந்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சிக்கு பள்ளி முதல்வர் ராஜகோபால் வரவேற்புரையாற்றினார். செயலாளர் சந்திரமவுலி கவர்னருக்கு பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். அதனைத் தொடர்ந்து பொருளாளர் ராமசுப்பிரமணியம், கவர்னர் ஆர்.என்.ரவிக்கு நினைவு பரிசு வழங்கினார். அதன் பின் மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடிய கவர்னர் ஆர். என்.ரவிசிறப்புரையாற்றி பேசியதாவது:

தோல்வியை கண்டு துவளாமல் பின் வாங்கிச் செல்லாமல் தோல்விக்கான காரணம் குறித்து ஆராய்ந்து அதனையே வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றினால் சாதனையாளராக ஜொலிக்க முடியும்.

வெற்றிக்கு முதல் காரணமாக மாணவர்கள் நேர மேலாண்மை , கடின உழைப்பு, தன்னம்பிக்கை ஆகியவற்றை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். இயற்பியல் பாடத்தை இயற்கை மற்றும் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி படிக்க வேண்டும்.

எனது வெற்றிக்கு முதல் காரணம் என் தாயின் அறிவுரைகள் தான். எனவே மாணவர்கள் தாங்கள் படிக்கும் காலத்திலும் அதற்கு பிறகும் பெற்றோர்கள் கூறும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். உங்களுடைய இலக்கு உயர்வானதாக இருந்தால் உங்கள் பள்ளிக்கும், உங்கள் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் பெருமை தேடித் தரும்.

இவ்வாறு அவர் பேசினார். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு பிரதமர் மோடி எழுதிய எக்சாம் வாரியர்ஸ் என்ற புத்தகத்தை பரிசாக வழங்கினார்.

# பெண் பஞ்சாயத்து தலைவர்களை சுதந்திரமாக செயல்பட விடுங்கள் கனிமொழி அறிவுரை



தூத்துக்குடி, அக். 25

தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் வடிநிலக் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நிரந்தர மறுசீரமைப்பு பணிகள் நடந்து வருகின்றன.

இந்த பணிகளை மாவட்ட கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில், கனிமொழி எம்.பி. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவர், வசவப்பபுரம் கருங்குளம் கிராமத்தில் உள்ள குட்டைக்கல் கண்மாயில் ரூ.75 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கரை பலப்படுத்துதல், தடுப்புச்சுவர், மதகு அமைத்தல் உள்ளிட்ட பணிகளையும், கோரம்பள்ளம் கண்மாயில் உடைப்பு ஏற்பட்ட பகுதிகளில் ரூ.1 கோடியே 25 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர மறுசீரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டார்.


தொடர்ந்து, காலங்கரை அத்திமரப்பட்டி வழியாக செல்லும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உப்பாற்று ஓடையின் குறுக்கே நெடுஞ்சாலைத்துறை, நபார்டு மற்றும் கிராம வங்கியின் மூலம் ரூ.14 கோடியே 88 லட்சம் மதிப்பில் நடந்து வரும் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளையும், ஓடையின் கரைகளை பலப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, நிரந்தர சீரமைப்பு பணிகளையும் உரிய காலத்துக்குள் விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்த கனிமொழி எம்.பி. பெண் பஞ்சாயத்து தலைவர்களை சுதந்திரமாக செயல்பட விடுங்கள் என்று பஞ்சாயத்து துணை தலைவருக்கு அறிவுரை வழங்கினார்.

# வெள்ளப்பெருக்கு குறைந்ததால் குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி

தென்காசி, அக்.25

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நேற்று கொட்டித் தீர்த்த கன மழை யின் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள குற்றால அருவிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.



குறிப்பாக, குற்றாலம் பகுதியில் உள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி, சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் நேற்று காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவிகளில் நேற்று குளிக்க தடை விதிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் குற்றாலம் பகுதியில் உள்ள அனைத்து அருவிகளிலும் இன்று காலை தண்ணீர் வரத்து சீரானது. இதைத்தொடர்ந்து சுற்றுலாப் பயணிகள் குளிக்க இன்று காலை 8 மணி முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானலில் கவர்னரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பரபரப்பு போஸ்டர்

கொடைக்கானல், அக்.25

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு தமிழக கவர்னர் ரவி வருகை புரிந்தார். இன்று கொடைக்கானலில் உள்ள சங்கரா வித்யாலயா பள்ளியில் மாணவர்களை சந்தித்து கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்பிறகு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்கிறார்.




கவர்னர் கொடைக்கானல் வருகையை முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன் டி.டி. தமிழ் தொலைக்காட்சியில் நடைபெற்ற இந்தி வார விழாவில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடும் போது தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும் என்ற வரி விடப்பட்டு இருந்ததை பல்வேறு கட்சியினர் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் கண்டித்து வந்தனர்.

இதனால் தமிழ்த்தாய் வாழ்த்தின் அந்த வரிகள் பிரபலமடைந்து வருகிறது. இன்று கொடைக்கானல் வந்த கவர்னர் ரவியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அவர் தங்கி இருந்தஓட்டல்முன்புறம் மற்றும் அவர் பங்கேற்க சென்ற வழிகளில் திராவிடர் தமிழர் மன்றம் சார்பில் பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அதில் சிறந்த திராவிட நல் திருநாடும் என்ற வாசகங்கள் இடம் பெற்று தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒட்டப்பட்டன. நேற்று இரவு வரை இந்த போஸ்டர்கள் தெரியாத நிலையில் இன்று காலை பல்வேறு இடங்களில் கண்டறியப்பட்டதால் அதனை போலீசார் கிழித்து அப்புறப்படுத்தினர்.

# மாநில அலவிலான யோகாசனப் போட்டி: திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை



நாமக்கல் அக் 25

மாநில அளவிலான யோகாசனப் போட்டியில் திருச்செங்கோடு விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மாணவிகள் முதல் பரிசுகளைப் பெற்றனர்.

மாநில அளவிலான இரண்டாவது யோகாசன போட்டி கரூரில் நடைபெற்றது. இதில் ஆந்திராஇ கேரளாஇ கர்நாடகா தெலுங்கானாஇ தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களிலிருந்தும் சுமார் 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். அப்போட்டியில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்ந்த மாணவிகள் முதல் மற்றும் இரண்டு மூன்றாவது பரிசினை பல்வேறு பிரிவுகளின் கீழ் வென்றுள்ளனர். குறிப்பாக இரண்டமாண்டு நுண்ணுயிரியல் துறையின் பயிலும் நிலா என்னும் மாணவி சிறப்பு பிரிவில் முதல் பரிசாக 14000 மதிப்புள்ள மிதிவண்டி மற்றும் சான்றிதழ்கள் பதக்கங்கள் வென்றுள்ளார் மற்றும் தரவரிசை பிரிவில் முதல் பரிசினை வென்றுள்ளார். வணிகவியல் துறையின் பி.சந்தியா என்ற மாணவி தரவரிசை பிரிவில் இரண்டாவது பரிசும்இ கனிணி அறிவியல் துறையின் கிருத்திகா என்ற மாணவி தரவரிசை பட்டியல் இரண்டாவது இடத்தையும் சிறப்பு பிரிவில் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளார். வணிகவியல் துறையின் க.சௌந்தர்யா மற்றும் வர்ஷினி ஆகிய இரு மாணவிகளும் தரவரிசை பிரிவில் மூன்றாவது பரிசினை வென்றுள்ளார். பரிசுகளை வெற்ற மாணவிகளுக்கு விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் தாளாளர் மற்றும் செயலர் டாக்டர் மு. கருணாநிதி மற்றும் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி.பேபிஷகிலா மாணவிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். உடன் யோகா ஆசிரியர் ம.கார்த்திகேயன்

# நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு திட்டத்தில் கட்டப்பட்டு வரும் பழங்குடியினர்களுக்கான குடியிருப்பு கட்டுமான பணிகள்

ஊட்டி, அக். 25

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், கடினமாலா ஊராட்சியில் பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் நிதி அயோக் மூலம் மாதிரி கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்ட கோழிக்குட்டை மற்றும் கொப்பையூர் ஆகிய பழங்குடியின கிராமத்தில் தலா ரூ.5.73 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 19 பழங்குடியினர்களுக்கான குடியிருப்பு (கோழிக்குட்டையில் 6 குடியிருப்புகள், கொப்பையூரில் 13 குடியிருப்புகள்) கட்டுமான பணிகளை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



முதலாவதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோழிக்குட்டை மற்றும் கொப்பையூர் பழங்குடியின கிராமங்களில், பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் நிதி அயோக் மூலம் மாதிரி கிராமமாக சாலை வசதி, வீடு வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு, மின்சார வசதி, நடமாடும் மருத்துவக்குழு, அங்கன்வாடி மையம் உள்ளதா, கிராமத்திலுள்ள குழந்தைகள் அங்கன்வாடிக்கு அனுப்பப்படுகின்றனரா, சுகாதார பணியாளர் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் சர்க்கரை உள்ளிட்ட நோய்கள் குறித்து பரிசோதிக்கிறார்களா, மகளிர் சுய உதவிக்குழு உள்ளதா, சமுதாயக் கூடம் உள்ளதா, கிராமத்திலுள்ளவர்களுக்கு வங்கி கணக்கு உள்ளதா, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை கிடைக்கப் பெறுகிறதா உள்ளிட்டவை குறித்து, கிராம மக்களிடம் கலந்துரையாடி, அப்பகுதிகளை ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் அரக்கோடு ஊராட்சி சேலாரை பழங்குடியினர் கிராமத்தினை நேரில் பார்வையிட்டு, அங்குள்ள பழங்குடியினர்களுடன் கலந்துரையாடி, அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், தேனாடு ஊராட்சியில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.5.73 கோடி மதிப்பீட்டில் பொம்மன் முதல் வக்கனமாரா வரை அமைக்கப்பட்டு வரும் சாலைப்பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, கோத்தகிரி வட்டாட்சியர் கோமதி, கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதர், விஜயா, மாவட்ட திட்டமிடும் அலுவலக புள்ளியல் அலுவலர் வெங்கடேசன், ஒருங்கிணைப்பாளர் தட்சாயினி, கடினமாலா ஊராட்சித்தலைவர் சாந்தி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோயம்புத்தூர் மாவட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம்: கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

கோவை, அக். 25

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தினை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி தொடங்கிவைத்து, பல்வேறு பகுதிகளில் களஆய்வுகளை மேற்கொண்டு, அப்பகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ. ஷர்மிளா, கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) ஸ்வேதா சுமன், பொள்ளாச்சி சார் ஆட்சியர் கேத்ரின் சரண்யா, உதவி காவல் கண்காணிப்பாளர் சிருஷ்டி சிங் இ.கா.ப., பொள்ளாச்சி நகராட்சி தலைவர் ஷியாமளா நவநிதகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சுரேஷ், பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் கணேசன், இணை இயக்குநர்(மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) ராஜசேகரன், பொள்ளாச்சி மாவட்ட தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் ராஜன், பொள்ளாச்சி வட்டாட்சியர் மேரிவனிதா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



பின்னர், மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் என்ற அடிப்படையில் உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்ட அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்யும் வகையில் உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற திட்டம் நடத்தப்பட வேண்டும். என அறிவித்திருந்தார்கள்.

ஆய்வு செய்யப்படும். மாவட்ட அளவிலான ஒரு அலுவலர் சம்மந்தப்பட்ட இடத்திற்கு நேரில் ஆய்வு செய்யும்போது பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு காண சாத்தியக்கூறுகள் இருந்தால் ஒரு நாளில் அதற்கான தீர்வுகள் காணமுடியும்.

இந்த ஆய்வு கூட்டத்தில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி. கேத்ரின் சரண்யா இ.ஆ.ப., நகராட்சி தலைவர் திருமதி.ஷியாமளா நவநீத கிருஷ்ணன், உதவி காவல் கண்காணிப்பாளர் திருமதி. சிருஷ்டி சிங் இ.கா.ப., பொள்ளாச்சி விழா தலைவர் ஆனந்தகுமார், பொள்ளாச்சி வர்த்தக சபை தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து, பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் பொள்ளாச்சி நகர கூட்டுறவு வங்கியின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தலா ரூ.50000 மதிப்பில் சிறு தொழில் வணிக கடன் உதவிகளையும், 2 பயனாளிகளுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் வீட்டுகடன் உதவிகளையும் என மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.53 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி வழங்கினார்.



செய்தியாளர் பயணத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அத்திப்பட்டு ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலக கட்டடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் எம்.எல்.ஏ. சிந்தனை செல்வன், கூடுதல் கலெட்கர் (வளர்ச்சி), திட்ட இயக்குநர் சரண்யா உள்பட பலர் உள்ளனர்.

# கும்பகோணம் வாலிபரிடம் ரூ.1.21 கோடி மோசடி செய்த இளம்பெண் மீது வழக்கு நடவடிக்கை எடுக்க மதுரை ஐகோர்ட் உத்தரவு

மதுரை, அக். 25

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தைச் சேர்ந்த பஷீர் அகமது என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:



நான் பக்ரைன் நாட்டில் சூப்பர் மார்க்கெட் நடத்தி வந்தேன். அங்கு அருகில் உள்ள அழகு நிலையத்தில் பணியாற்றிய கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த வினி என்ற ஏஞ்சல் என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது.

அந்தப் பெண் கேரளாவில் பியூட்டி பார்லர் தொழில் தொடங்க உள்ளதாகவும், அதில் அதிக வருமானம் வரும் என்றும், எனவே அதில் என்னை முதலீடு செய்ய சொன்னார். அதனை நம்பி நான் வங்கி மூலமாகவும், நேரடியாகவும் பணம் மற்றும் தங்க நகைகள் என ரூ.1 கோடியே 21 லட்சம் கொடுத்திருந்தேன்.

தொழிலில் வரும் லாபத்தை எனக்கு தருவதாக உறுதியளித்திருந்தார். நான் வழங்கிய பணம் மற்றும் அதற்கான லாபம் குறித்து அந்த பெண்ணிடம் பல முறை கேட்டும் தராமல் இழுத்தடித்து வந்தார். கடந்த மாதம் அவரை நேரில் சந்திக்க அவரது சொந்த ஊரான கேரளா மாநிலம் கொல்லம் பகுதிக்கு சென்றேன்.

அப்போது அவர் அங்கு இல்லை. மேலும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது அந்த பெண் என்னைப் போன்று பல பேரிடம் தொழில் தொடங்குவதாக கூறி பல லட்சம் ரூபாய் மோசடி செய்துவிட்டு தலைமறைவாக உள்ளார் என தெரிய வந்தது.

இதுகுறித்து போலீசாரிடம் புகார் அளித்திருந்தேன். ஆனால் இதுவரை நடவடிக்கைகள் இல்லை. எனவே என்னிடம் மோசடி செய்த பெண் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும். எனது பணத்தையும் மீட்டுத்தர வேண்டுமென புகார் மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி முரளி சங்கர் முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணை செய்த நீதிபதி, பாதிக்கப்பட்ட நபர் அளித்த புகாரின் அடிப்படையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்து இரண்டு வார காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை முடித்து வைத்தார்.

# விவாகரத்து வழக்கில் தம்பதியை நேரில் ஆஜராக நிர்பந்திக்க கூடாது ஐகோர்ட் உத்தரவு

சென்னை, அக். 25

அமெரிக்காவில்வாழும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பதிக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இருவரும்பரஸ்பரம்விவாகரத்து கேட்டு சென்னை குடும்ப நல கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இவர்கள் விசா பெறுவதில் சிக்கல் ஏற்பட்டதால், காணொலி காட்சி வாயிலாக விசாரணைக்கு ஆஜராகினர். ஆனால், அவர்கள், அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தில் இருந்து காணொலியில் ஆஜராகவில்லை என்று கூறி, அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்ய குடும்பநல கோர்ட்டுமறுத்துவிட்டது.

இதை எதிர்த்து மனைவி தரப்பில் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம். நிர்மல்குமார், "குற்றவியல் வழக்குகளில்தான் விசாரணைக்கு நேரில் ஆஜராவது கட்டாயமாகும். இதுபோன்ற விவாகரத்து வழக்கில் காணொலி வாயிலாக ஆஜராக வாய்ப்பு அளிக்க வேண்டும். வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியை நேரில் தான் ஆஜராக வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. அமெரிக்காவில் வசிக்கும் தம்பதியிடம் காணொலி காட்சி வாயிலாக விசாரிக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

# விரைவில் பாராளுமன்றத்தில் பிரியங்கா காந்தியின் குரல் ஒலிக்கும் விஜய் வசந்த்



கன்னியாகுமரி, அக். 25

வயநாடு மக்களவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் பிரியங்கா காந்தி, இன்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அதற்கு முன்பாக, காங்கிரஸ் சார்பில் ரோடுஷோ நடைபெற்றது. இதைதொடர்ந்து, பொதுக்கூட்டம் நடந்தது.இந்தகூட்டத்தில் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மட்டுமின்றி, சோனியாகாந்தி, மல்லிகார்ஜுன கார்கே மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், இந்த ரோடுஷோவில் பங்கேற்ற கன்னியாகுமரி தொகுதி எம்.பி., விஜய் வசந்த் இது குறித்து தனது சமூக வலைத்தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

அன்னை சோனியா காந்தி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, தலைவர் ராகுல் காந்தி மற்றும் மூத்த தலைவர்கள் உடனிருக்க, லட்சக்கணக்கான தொண்டர்கள் படைசூழ இன்று பிரியங்கா காந்தி வயநாடு பாராளுமன்ற இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

வயநாடு தொகுதியின் இடைத்தேர்தல் விரைவில் நடைபெறுகிறது. அதற்கான ஊர்வலத்தில் கலந்துக் கொள்வதற்கு மிக்க மகிழ்ச்சி. மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் பிரியங்கா காந்தி வெற்றிப் பெற்று பாராளுமன்றத்தில் அவரது குரல் உயர்ந்து இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர் வேலம்பட்டியில் பொதுமக்கள் விவசாயிகள் காத்திருப்பு போராட்டம்

பல்லடம், அக். 25

திருப்பூர்மாவட்டம் பல்லடம் அருகே வடக்கு அவிநாசிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட வேலம்பட்டியில் உள்ள சுங்கச்சாவடி நீர்நிலைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அதனை அகற்ற கோரியும் அந்தப்பகுதி பொதுமக்கள் மற்றும் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர், தன்னார்வலர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நாளை முதல் சுங்கச்சாவடி செயல்பாட்டுக்கு வரும் என சுங்கச்சாவடி நிர்வாகம் தரப்பில் அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் இன்று சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அங்கு அவிநாசிபாளையம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# மகப்பேறு இறப்பை குறைக்க அவசர கால கட்டுப்பாட்டு அறை அமைப்பு



சென்னை, அக்.25

மகப்பேறு இறப்புகளை தடுக்கும் வகையில் அவசர கால கட்டுப்பாட்டு அறை (வார் ரூம்) அமைக்கும் பணியை தமிழக சுகாதாரத்துறை தொடங்கியுள்ளது. மகப்பேறு இறப்பு விகிதத்தை (எம்.எம்.ஆர்.) குறைக்க இந்த ஆண்டு அக்டோபரில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான பணிக்குழுவின் முதல் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், பணிக்குழு தரவுகளை ஆய்வு செய்து, பிரசவத்திற்குப் பிந்தைய காலத்தில் 74.25% தாய் இறப்புகள் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விரிவான பிறப்புக்கு முந்தைய திட்டமிடல் முறையை கொண்டு வரவும், ஒரு கட்டுப்பாட்டு அறையை அமைக்கவும், பெரிய அளவிலான திறன் வளர்ச்சி சார்ந்த பயிற்சி முகாம்களை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு லட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு எம்.எம்.ஆர். 54 க்கு மேல் இருக்கும் வழிகாட்டுதல் திட்டத்தை கொண்டு வரவும் பணிக்குழு முடிவு செய்தது.

நோய்த்தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், பரிந்துரைகள், பாதுகாப்பான கருக்கலைப்பு நடைமுறைகள், துறைகளுக்கு இடையே தடையற்ற ஒருங்கிணைப்பு போன்ற பரிந்துரைகளும் வழங்கிப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சுகாதாரத்துறை செயலாளர் சுப்ரியா சாஹூ தலைமை தாங்கினார். இது தொடர்பான அரசாணையையும் துறை வெளியிட்டுள்ளது.

வெளியீட்டின் படி, 20142024 வரையிலான தரவுகளின்படி, 72% இறப்புகள் கிராமப்புறங்களில் நிகழ்ந்தன, மீதமுள்ள 28% நகர்ப்புறங்களில் நிகழ்ந்தன. தஞ்சாவூர், திண்டுக்கல், மயிலாடுதுறை, தேனி, நாமக்கல், திருவாரூர், புதுக்கோட்டை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் எம்எம்ஆர் பாதிப்பு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் எம்.எம்.ஆர். ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 55க்கு மேல் இருப்பது கண்டறியப்பட்டது.

சமீபத்திய மாதிரிப் பதிவு முறை (சாம்பில் ரெஜிஸ்டிரேஷன் சிஸ்டம்) தரவுகளின்படி, தமிழ்நாட்டின் எம்.எம்.ஆர். ஒரு லட்சம் பிறப்புகளில் 54 ஆக உள்ளது. தேசிய சராசரி ஒரு லட்சம் பிறப்புகளில் 97 ஆக உள்ளது. இது கேரளாவில் 19, மகாராஷ்டிராவில் 33, தெலுங்கானா 43, ஆந்திரா 45, ஜார்கண்ட் 130 மற்றும் குஜராத்தில் 57 ஆக உள்ளது.

# பகல் கனவு காண்கிறார் மு.க.ஸ்டாலின் எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 25

சேலம் மாவட்டம் வனவாசியில் அதிமுக செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

★ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் பகல் கனவு காண்கிறார்.




★ முதல்வரின் பகல் கனவு என்றும் பலிக்காது.

★ கடந்த தேர்தலில் அதிமுகவின் வாக்கு வங்கி 30 சதவீதம் மட்டுமே சரிந்தது. பல தொகுதிகளில் திமுகவின் செல்வாக்கு சரிந்துள்ளது.

★ தமிழ்நாட்டில் திமுகவின் செல்வாக்கு சரிந்துள்ளது. அதிமுகவின் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்று கூறினார்.

# மாடு முட்டியதில் மொபட்டில் சென்ற கல்லூரி மாணவி படுகாயம்

நெல்லை, அக். 25

நெல்லை மாநகராட்சியில் டவுன், தச்சநல்லூர், பாளை, மேலப்பாளையம் ஆகிய 4 மண்டலங்களில் மொத்தம் 55 வார்டுகள் இருக்கின்றன.

இதில் பெரும்பாலான வார்டுகள் நகரின் மையப் பகுதியிலும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் கூட்ட நெரிசலான இடங்களிலும் அமைந்துள்ளது.



இந்நிலையில் மாநகர பகுதியில் காலை மற்றும் மாலை வேளையில் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவமாணவிகள் மற்றும் வேலைக்கு செல்பவர்கள் என மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதால், சாலைகள் பரபரப்பாகவே இயங்கும்.

இந்த நிலையில் ஆங்காங்கே நாய்கள் மற்றும் மாடுகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதால் அவை வாகனங்களில் மோதி விபத்துக்களை ஏற்படுத்தி வருவது தொடர்கதையாகி விட்டது.

சாலைகளில் திரியும் மாடுகளால் தொடர் விபத்துகளும், வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஒருவித அச்ச உணர்வையும் ஏற்படுத்தி உள்ளது.

இதனால் நெல்லை மாநகராட்சி நிர்வாகித்திடம் பொதுமக்கள் பலமுறை கோரிக்கை வைத்ததன் பேரில் சாலையில் சுற்றி திரியும் மாடுகளை அவ்வப்போது சிறை பிடித்து அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் தற்போது மாநகர பகுதியில் மீண்டும் பல இடங்களில் மாடுகள் சுற்றி திரிகிறது.

இந்நிலையில் நெல்லை மாநகராட்சி 55வது வார்டு திருமால் நகர் பகுதியில் சாலையில் சுற்றி திரிந்த ஒரு மாடு அந்த வழியாக மொபட்டில் சென்ற கல்லூரி மாணவி ஸ்வதிகா மீது எதிர்பாராத விதமாக மோதியது. இதில் நிலை தடுமாறி கீழே விழுந்த அந்த மாணவி சாலையில் சில அடி தூரம் போய் விழுந்தார்.

இதனை அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் பார்த்து மாணவியை தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் நடந்த இடத்தில் ஒரு கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமராவில் இந்த விபத்து காட்சிகள் பதிவாகி இருந்தது. அவை தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. மாநகரில் கால்நடைகளால் விபத்து ஏற்படும் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடப்பது தொடர்கதையாகி வருவது வேதனைக்குரிய விஷயமாக பார்க்கப்படுகிறது.

இதில் மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக கவனம் செலுத்தி சாலையில் சுற்றி திரியும் மாடுகளை கட்டுப்படுத்துவதற்காக மாட்டின் உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கை வழங்க வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

# தீபாவளி போனஸ் கேட்டு மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் போராட்டம் 2வது நாளாக நீடிப்பு

திருச்சி, அக். 25

திருச்சி மாநகராட்சியில் உள்ள 65 வார்டுகளிலும் அன்றாடம் சுமார் 400 டன் குப்பைகளை சேகரித்து, அகற்றும் பணியில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.



இதில் பணியாற்றும் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்க வலியுறுத்தி நேற்று மாலை 6 மணி முதல் மாநகராட்சி அலுவலகம் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். விடிய விடிய போராட்டம் நீடித்தது.

இதன் காரணமாக திருச்சி மாநகராட்சி வளாகத்திற்கு வெளியே துப்புரவு பணியாளர்கள் தரையில் படுத்து தூங்கினர்.

இந்நிலையில் இன்று காலை தொடர்ந்து போராட்டம் 2வது நாளாக நடந்து கொண்டிருக்கிறது. இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்ட நிர்வாகிகளை பேச்சு வார்த்தைக்கு வரும்படி அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். பேச்சுவார்த்தைக்கு நிர்வாகிகள் சென்றபோது தனியார் நிறுவனத்தின் ஊழியர்கள் ஒப்பந்த ஊழியர்களிடம் பேச ஆரம்பித்தனர். இதை அறிந்த பேச்சுவார்த்தைக்குச் சென்ற நிர்வாகிகள் உடனடியாக மீண்டும் திரும்பி வந்தபோது தனியார் நிறுவனத்தின் ஊழியர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பிறகு அதிகாரிகள் துப்புரவு பணியாளர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

# தீபாவளியை முன்னிட்டு தனியார் பஸ்களை இயக்க அரசு திட்டம் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு



சென்னை, அக். 25

தீபாவளியையொட்டி தனியார் பஸ்களையும் வாடகைக்கு எடுத்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்து உள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு தேவைக்கேற்ப தனியார் பஸ்களை இயக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் இந்த முடிவிற்கு சிஐடியூ,அண்ணாதொழிற்சங்கம்,பாட்டாளிதொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக சிஐடியு மாநில தலைவர் சவுந்தரராசன் கூறுகையில்,

★ தீபாவளிக்கான தனியார் பஸ் ஒன்றுக்கு 1 கி.மீ.க்கு ரூ.51.25 கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

★ அனைத்து இருக்கைகளும் நிரம்பினாலும் இல்லாவிட்டாலும் ரூ.51.25 கொடுக்க வேண்டும்.

★ அரசு பஸ் ஒன்று 1 கி.மீ. ஓடினால் சராசரியாக ரூ.32 வருவாய் கிடைக்கும்.

★ அரசு பஸ் வருவாய் ரூ.32, தனியார் பஸ் செலவு ரூ.51.25.

★ அரசு பஸ்சை ஒப்பிடுகையில் தனியாருக்கு கூடுதலாக ரூ.19 அரசு கொடுக்கிறது.

★ சென்னைதிருச்சிக்கு அரசு பஸ் முழுவதும் நிரம்பினால் ரூ.28,600 வருவாய் கிடைக்கும்.

தனியார் பஸ் ஒன்றுக்கு அரசு கொடுக்க உள்ள தொகை ரூ.32,000.

★ கிடைக்கும் வருவாயை விட ரூ.3000 வரை தனியாருக்கு கூடுதலாக கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? ★ தனியார் நிறுவனங்கள், கூடுதல் பஸ்களை இயக்கவே அதிக வாய்ப்பு உள்ளது.

★ தனியார் பஸ்களில் பயணிகள் இருந்தாலும் இல்லை என்றாலும் தனியாருக்கு பணம்.

★ சொந்த ஊர்களில் இருந்து சென்னை திரும்பும்போது கூட்டம் இல்லை என்றால் என்ன நிலை?

★ தனியாருக்கு கொடும் பணத்தை அரசு பஸ்களுக்கு கொடுத்தால் என்ன? அரசிடம் கூடுதல் பஸ்கள் இருக்கும்போது தனியார் பஸ்கள் ஏன்? என்று அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

# ஒரே நாளில் 3 தொழில் அதிபர்கள் வீடுகளில் வருமான வரிச் சோதனை

கோவை, அக். 25

கோவை சிங்காநல்லூர் சென்ட்ரல் ஸ்டுடியோ சாலையில் வசிக்கும் தொழில் அதிபர் வீட்டுக்கு இன்று காலை வருமான வரித்துறை அதிகாரிகள் திடீரென வந்தனர். அவர்கள் தொழில் அதிபரின் நிறுவனம் தொடர்பாக வரவுசெலவு விவரங்களை கேட்டறிந்து சோதனையில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக 5க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இதேபோல உப்பிலிபாளையம் ராமானுஜம் நகரில் வசிக்கும் தொழில் அதிபர் வீட்டிலும் வருமான வரித்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். சிவானந்தா காலனியில் வசிக்கும் மற்றொரு தொழில் அதிபர் வீட்டிலும் இன்று வருமான வரிச்சோதனை நடந்தது.




கோவையில் ஒரே நாளில் 3 தொழில் அதிபர்கள் வீடுகளில் வருமான வரிச்சோதனை நடந்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

# நேற்று இரவு கொட்டித் தீர்த்த மழையால் குடியிருப்புகளில் புகுந்தது மழைநீர்: மதுரை செல்லூரில் பொதுமக்கள் அவதி



மதுரை, அக்.24

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு இடங்களில் உள்ள கண்மாய்கள், ஊருணிகள் நிரம்பி வருகின்றன. மதுரை மாவட்டத்தை பொருத்தவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவும், நேற்றும் நள்ளிரவில் பலத்த மழை கொட்டித் தீர்த்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. குறிப்பாக மதுரையில் உள்ள செல்லூர் 50 அடி ரோடு, சுயராஜ்ஜியபுரம் பகுதிகளில், பல்வேறு தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது.

இதனால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று பெய்த மழையால் செல்லூர்பந்தல்குடி கால்வாயில் நேற்று இரவு திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கால்வாய் கரையை மூழ்கடித்து வெள்ளம் சென்றது. இதனால், மாநகராட்சி 24க்குட்பட்ட காமராஜர் தெரு பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் மழைநீர் சூழ்ந்தது.

இதனால், பொதுமக்கள் போக்குவரத்துக்கு அவதிப்படுகின்றனர். இது குறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'பருவமழை பாதிப்புகளை தவிர்க்க போர்க்கால அடிப்படையில் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒரு சில இடங்களில் குடியிருப்புகளில் மழைநீர் புகுந்துள்ளது. பொக்லைன் உள்பட ராட்சத இயந்திரங்கள், கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள் உதவியுடன் தூய்மைப் பணியாளர்கள் 4,000 பேர் தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வேலூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு விற்பனையை மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்



வேலூர், அக். 24

வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை 14.12.1942ல் பதிவு செய்யப்பட்டு 27.01.1943 முதல் பணி தொடங்கப்பட்டு 81 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இப்பண்டகசாலையில் 2 சுய சேவை பிரிவுகள், 2 கூட்டுறவு மருந்து விற்பனை பிரிவுகள், 5 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 5 பெட்ரோல் வழங்கு நிலையங்கள், 4 மினி சூப்பர் மார்க்கெட், 147 நியாய விலை கடைகள் ஆகியவை இப்பண்டசாலையின் கீழ் மக்களுக்கு சேவையாற்றி செயல்பட்டு வருகின்றன.

இப்பண்டகசாலையில் தலைமையகத்தில் கூட்டுறவு மருந்து விற்பனை பிரிவுகளில் விற்பனை செய்யப்படும் அனைத்து மருந்துகளுக்கும் 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கி பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறது. சுயசேவைப் பிரிவுகளில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி அதிகப்படியான சில்லரை விலையை விட குறைவான விலைக்கே மளிகை பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்யப்பட்ட பண்ணை பசுமை காய்கறி கடை செயல்பட்டுவருகிறது. தற்பொழுது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களுக்கு தரமான பட்டாசு பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்யும் நோக்கில் தீபாவளி சிறப்பு விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடியின் மூலம் ரூபாய் 85 லட்சத்திற்கு பட்டாசு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 1 கோடி அளவிற்கு பட்டாசு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு ஆர்டரின் பெயரில் டோர் டெலிவரி வழங்கப்படும். மேலும் கிப்ட் பாக்ஸுகளுக்கு கூடுதலாக 5% விலை குறைப்பு விற்பனை செய்யப்படும். இங்கு குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் வண்ண மத்தாப்புகள், வான வேடிக்கைகள், பல்வேறு வெடி ரகங்கள் தரமான நிறுவனங்களான ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ், போன்ற நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வெளி மார்க்கெட் விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் கூட்டுறவுத் துறையின் சார்பில் விற்பனை செய்யப்படும் இந்த தரமான, விலை குறைவான பட்டாசுகளை பெற்று பாதுகாப்புடனும், காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை, மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை பட்டாசுகளை பாதுகாப்பாக வெடித்து மகிழ்ச்சியுடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடுமாறும், வேலூர் மாவட்ட பொதுமக்கள் அனைவருக்கும் தன்னுடைய தீபாவளி நல்வாழ்த்துக்களை மாவட்ட கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி தெரிவித்தார்.

# நாட்றம்பள்ளி அருகே 3 யூனிட் செயற்கை மணல் பறிமுதல்



நாட்றம்பள்ளி, அக். 24

நாட்றம்பள்ளி அருகே 3 யூனிட் செயற்கை மணலை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த வெலக்கல்நத்தம் ஊராட்சியில் அமைந்துள்ள செட்டேரி டேம் பகுதியை சுற்றிலும் பல ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்கள் உள்ளது. 10 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பெய்த மழைக்காரணமாக செட்டேரி அணை நிரம்பியது. இதனால் விவசாய பணிகள் மீண்டும் களைகட்ட தொடங்கியது.

இந்நிலையில் மணல் மாபியா கும்பல், அங்குள்ள அணை மற்றும் நீர்வரத்து கால்வாய்களில் மணல் அள்ளி விற்று வருகின்றனர். குறிப்பாக டேம் அருகே விவசாய நிலங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள மண் மற்றும் மணலை செயற்கையாக தயாரித்து விற்று வருகின்றனர். இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலின்பேரில் சில வாரங்களுக்கு முன்பு அதிகாரிகள் ஆய்வுசெய்து, செயற்கை மணல்தயாரிக்கும்தொட்டிகளை அகற்றினர்.

இந்நிலையில் அரசு அதிகாரிகளுக்கு தெரியாத வகையில் கடந்த வாரம் மீண்டும் செயற்கை மணல் தயாரிக்கும் தொட்டிகளை அமைத்து இரவோடு இரவாக செயற்கை மணல் தயாரித்து விற்பனை செய்வதை தொடங்கியுள்ளனர்.

இதுதொடர்பாக அதிகாரிகளுக்கு மீண்டும் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் நேற்றிரவு நாட்றம்பள்ளி தாசில்தார் ராமகிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி தலைமையிலான போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் சம்பவ இடம் சென்று அங்கு பதுக்கி வைத்திருந்த 3 யூனிட் செயற்கை மணலை பறிமுதல் செய்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மழையால் ஓடைகளில் நீர்வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி



ஸ்ரீவில்லிபுத்தூர், அக். 24

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால், நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், கண்மாய் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே, மேற்குத் தொடர்ச்சி மலையில் செண்பகத்தோப்பு வனப்பகுதி உள்ளது.

புலிகள் காப்பக பகுதியான இந்த வனப்பகுதியில் நேற்று இரவு 8 மணி முதல் இன்று அதிகாலை 2 மணி வரை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், மலையடிவாரப் பகுதிகளில் நீரோடைகளில் மழைநீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி ஒருவர்கூறுகையில், 'மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்த மழை காரணமாக நீர்வரத்து ஓடைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் மூலம் மம்சாபுரம் பகுதியில் உள்ள வாழைக்குளம் கண்மாய் மற்றும் வேப்பங்குளம் கண்மாய் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரும்.

இது பாசன விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்' என தெரிவித்தார்.

# வைரலாகும் 'வேட்டையன்' சப்வே சண்டைக்காட்சி மேக்கிங் வீடியோ!



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி இருந்த 'வேட்டையன்' திரைப்படம் கடந்த 10ந் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. இயக்குனர் ஞானவேல் இயக்கியுள்ள இந்த படத்திற்கு இசையமைப்பாளர் அனிருத் இசையமைத்துள்ளார். பகத் பாசில், ராணா, மஞ்சு வாரியர் உள்ளிட்ட பிரபலங்கள் இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தில் போலீஸ் அதிகாரியாக ரஜினிகாந்தும், என்கவுன்டரை எதிர்க்கும் வழக்கறிஞராக அமிதாப் பச்சனும் நடித்துள்ளனர். இந்த படம் கல்வி முறையில் உள்ள ஓட்டைகள் குறித்தும் போலி என்கவுன்டர் குறித்தும் பேசுகிறது. இப்படம் தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களில் வசூல் சாதனை படைத்து வருகிறது. வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது. கலவையான விமர்சனங்களைப் பெற்றாலும் உலகளவில் ரூ.350 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளது. இப்படத்தின் வெற்றிக்காக நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் இயக்குநர் த. செ. ஞானவேல் உள்பட படக்குழுவினர் கலந்துகொண்டனர். இந்தப் பயணத்தில் பயணித்த அனைவருக்கும் தங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கும் வகையில், படக்குழுவினர் அனைவருக்கும் அசைவ விருந்து வழங்கியது. இந்த நிலையில், வேட்டையன் படத்தில் இடம்பெற்ற சுரங்க நடைபாதை சண்டைக்காட்சியின் மேக்கிங் வீடியோவை தயாரிப்பு நிறுவனம் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது. அந்த வீடியோவில், ரஜினிகாந்துக்கு சண்டைப் பயிற்சியாளர்கள் அன்பறிவ் ஆக்சன் சொல்லித்தருவது, அதை ஒளிப்பதிவாளர் படமாக்குவது. இயக்குனர் ஞானவேல் காட்சி குறித்து விளக்குவது என அந்த சண்டைக்காட்சி படமாக்கப்பட்டபோது எடுத்த காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

# சர்வதேச ஆக்கி: 2வது போட்டியில் ஜெர்மனியை வீழ்த்திய இந்தியா.. ஷூட் அவுட்டில் தொடரை இழந்த சோகம்



இந்தியா ஜெர்மனி அணிகள் இடையிலான 2 போட்டிகள் கொண்ட சர்வதேச ஆக்கி தொடர் டெல்லியில் உள்ள மேஜர் தயான்சந்த் தேசியஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதில் முதலாவது போட்டி நேற்று முடிவடைந்தது. இந்த ஆட்டத்தில் ஜெர்மனி வெற்றி பெற்றது.

இதனையடுத்து 2வது போட்டி இன்று நடைபெற்றது. இதில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய இந்தியா 53 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது. இந்தியா தரப்பில் சுக்ஜீத் சிங், ஹர்மன்பிரீத் சிங் தலா 2 கோல்களும் அபிஷேக் ஒரு கோலும் அடித்தனர்.

பின்னர் இந்த தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் கடைபிடிக்கப்பட்டது. ஷூட் அவுட்டில் ஜெர்மனி 31 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

2வது போட்டியில் அபார வெற்றி பெற்றும் தொடரை இழந்தது இந்திய ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# புஷ்பா 2 திரைப்படத்தின் புதிய ரிலீஸ் தேதி




"புஷ்பா 2" திரைப்படத்தின் புதிய ரிலீஸ் தேதியை தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய அளவில் ஹிட் அடித்த படம் புஷ்பா தி ரைஸ் . இப்படத்தின் வெற்றியைத்தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக . 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகி வருகிறது.

'புஷ்பா 2 தி ரூல்' படத்தின் டீசரும் அதனைத் தொடர்ந்து படத்தின் பாடல்களில் லிரிக் வீடியோவும் வெளியாகி வைரலாகின. இப்படம் கடந்த செப்டம்பர் 15ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் படப்பிடிப்பில் சில தாமதங்கள் ஏற்பட்டதால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப்போனது. 'புஷ்பா 2 தி ரூல்' படம் வருகிற டிசம்பர் 6ம் தேதி வெளியாவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீண்டும் ரிலீஸ் தேதியை மாற்றியுள்ளனர். அதன்படி, டிசம்பர் 5ம் தேதி இப்படம் உலகளவில் வெளியாகவுள்ளது. இதனையடுத்து, படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

# வங்காளதேசத்திற்கு எதிரான வெற்றி.. 10 வருட கால சோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த தென் ஆப்பிரிக்கா



தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் மிர்புரில் கடந்த 21ம் தேதி தொடங்கிய முதலாவது டெஸ்ட் போட்டி இன்று முடிவடைந்தது.

இதில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

மேலும் இந்த வெற்றியின் மூலம் ஆசிய மண்ணில் கடந்த 10 ஆண்டுகளாக டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதில்லை என்ற நீண்ட கால சோகத்திற்கு தென் ஆப்பிரிக்கா முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

# சிறிய திரைப்படங்கள் வெற்றி பெறுவது திரைத்துறையை மேலும் ஊக்குவிக்கும் நடிகர் விமல்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருப்பவர் விமல். இவர் தற்போது 'சார்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தை 'கன்னி மாடம்' என்ற படத்தை இயக்கி தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமான போஸ் வெங்கட் இயக்கியுள்ளார். இப்படத்தில் விமல் உடன் இணைந்து சரவணன், விஜய் முருகன், ஆடுகளம் ஜெயபாலன், நடிகை ரமா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் சாயா கண்ணன் என்பவர் கதாநாயகியாக நடித்துள்ளார். இப்படத்தை எஸ்எஸ்எஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, இயக்குனர் வெற்றிமாறனின் கிராஸ்ரூட் பிலிம் நிறுவனம் வெளியிடுகிறது. முதலில் மா.பொ.சி (மாங்கொல்லை பொன்னரசன் சிவஞானம்) என தலைப்பிடப்பட்ட இப்படம் தற்பொழுது "சார்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்படம் கடந்த 18ம் தேதி வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. திரைப்படத்தை திரைப்பிரபலங்கள் பார்த்து அவர்களது கருத்தை வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் ஒளிப்பதிவாளர் நட்டி, மைம் கோபி, ரியோ, இயக்குனர் தமிழ், விஜய் சேதுபதி, சீமான் அவர்களது பாராட்டை பதிவிட்டனர். 'சார்' திரைப்படத்தின் வெற்றியை கொண்டாடும் விதமாக திருப்பூர்ஸ்ரீசக்தி திரையரங்கிற்கு வந்த நடிகர்விமல், இயக்குனர்போஸ் வெங்கட் உள்ளிட்ட படக்குழுவினர்ரசிகர்களுடன் அமர்ந்து திரைப்படத்தை கண்டுகளித்தனர். பின்னர் கேக் வெட்டி படத்தின் வெற்றியை உற்சாகமாக கொண்டாடினர். இதனைத்தொடர்ந்து நடிகர் விமல் கூறியதாவது: `சார்' திரைப்படம் வெற்றியடைந்தது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுபோன்றசிறியதிரைப்படங்கள்வெற்றி பெறுவது திரைத்துறையை மேலும் ஊக்குவிக்கும். ஓடிடி, திரையரங்கு என்பவை வெவ்வேறானவை. இரண்டும் திரைத்துறைக்கு மிகுந்த ஊக்கத்தை வழங்குகிறது. திரையரங்குகள் மூலம் வெளியாகும் திரைப்படங்கள் ரசிகர்களின் ஆதரவுகளை பெற்று கொண்டாட்டத்தை ஏற்படுத்துகிறது. விஜய் மாநாட்டிற்கு விஷால் செல்வேன் என கூறியது வரவேற்கத்தக்க விஷயம். எனக்கு அந்த நேரத்தில் படப்பிடிப்பு இருக்கும் காரணத்தால் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது. இவ்வாறு அவர் கூறினார். இயக்குனர் போஸ் வெங்கட் கூறுகையில், `சிறிய திரைப்படங்கள் வெற்றி பெற நாட்கள் தேவைப்படுகிறது. ஆனால் முதல் 3 நாட்கள் மட்டுமே வாய்ப்பு கிடைக்கிறது. அதற்கு அடுத்த நாட்கள் திரையரங்குகளால் பொறுமை காக்க முடியாத நிலையில் நல்ல படங்களும் திரையரங்கை விட்டு வெளியேறுகிறது. ஆனால் லப்பர் பந்து, சார் ஆகிய படங்களுக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பு மகிழ்ச்சியை தருகிறது. வார இறுதி நாட்கள் தவிர்த்து அடுத்தடுத்த நாட்களிலும் ரசிகர்களின் ஆதரவைப் பெற்று படம் வெற்றி அடைந்திருக்கிறது. பொது மக்களின் நல்ல விமர்சனம் காரணமாக படம் வெற்றி அடைந்திருக்கிறது' என்றார்.

# 2வது டெஸ்ட்: முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணியின் 10 விக்கெட்டுகளையும் வீழ்த்திய தமிழக வீரர்கள்



இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில்பெங்களூருவில்நடந்தமுதலாவதுடெஸ்டில்நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியா நியூசிலாந்து அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் புனேயில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

இந்திய அணியில் ராகுல், குல்தீப் யாதவ் மற்றும் சிராஜ் ஆகியோருக்கு பதிலாக கில், வாஷிங்டன் சுந்தர் மற்றும் ஆகாஷ் தீப் சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி இந்திய வீரர்களான தமிழகத்தை சேர்ந்த அஸ்வின் மற்றும் வாஷிங்டன் சுந்தரின் சுழலில் சிக்கி மொத்தமாக விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 259 ரன்களில் ஆல் அவுட் ஆகியது. அந்த அணியின் 10 விக்கெட்டுகளையும் சுந்தர் (7) மற்றும் அஸ்வின் (3) வீழ்த்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தனர்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா கேப்டன் ரோகித் சர்மாவின் விக்கெட்டை இழந்து 14 ரன்கள் அடித்துள்ளது.


**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**


Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.